

# உரிமைகள் சுதந்திரங்களுக்கான கனடிய சாசனம்



கனடா இறைவனின் மேலான்மையையும் சட்டத்தின் ஆட்சியையும் ஏற்றுக்கொள்ளும் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவானதாக இருப்பதால்:

## உரிமைகள் சுதந்திரங்களுக்கான உத்தரவாதம்

1. உரிமைகள் சுதந்திரங்களுக்கான கனடிய சாசனம் அதன் கண் அடங்கிய விடயங்களில் ஓர் சுதந்திரமான ஜனநாயக சமூகத்தில் சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் துல்லியமாக நியாயப்படுத்தக்கூடிய உரிமைகள் சுதந்திரங்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்றது.

## அடிப்படைச் சுதந்திரங்கள்

2. ஒவ்வொருவருக்கும் பின்வரும் அடிப்படைச் சுதந்திரங்கள் உண்டு: (அ) மனச்சாட்சிக்கும் சமயத்துக்குமான சுதந்திரம், (ஆ) சிந்தனை, நம்பிக்கை, கருத்துரை சுதந்திரங்களுடன் பத்திரிகை மற்றும் ஏனைய ஊடகங்களின் சுதந்திரம் உள்ளடக்கிய பேச்சுச் சுதந்திரம் (இ) அமைதிநிலையில் ஒருங்கு கூடுதலுக்கான சுதந்திரம் மற்றும் (ஈ) உறவாடல் சுதந்திரம்

## ஜனநாயக உரிமைகள்

3. ஒவ்வொரு கனடிய பிரஜைக்கும் மக்கள் சபை அல்லது சட்டநிருபண சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் வாக்களிப்பதற்கும் அவற்றில் உறுப்பினர்களாவதற்கும் உரிமை உண்டு. 4. (1) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தலின் போது விடுக்கப்பட்ட அறிக்கைக் கட்டளையில் சபை கூடுவதற்காகக் குறிக்கப்பட்ட நாளில் இருந்து ஐந்து வருடங்களுக்கு மேலாக மக்கள் சபை மற்றும் சட்ட சபை நீடிக்க முடியாது. (2) போர், படையெடுப்பு அல்லது கிளர்ச்சி உண்மையில் ஏற்பட்டு அல்லது ஏற்படும் என்று அஞ்சப்படும் காலங்களில் மக்கள் சபை அல்லது சட்ட நிருபண சபையின் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானவர்கள் நீடிப்புக்கு எதிர்த்து வாக்களிக்காத பட்சத்தில் ஒரு மக்கள் சபை நாடாளுமன்றத்தினாலும் ஒரு சட்டநிருபண சபை சட்டமன்றத்தினாலும் ஐந்து வருடங்களுக்கு மேலாகவும் நீடிக்கப்படலாம். 5. நாடாளுமன்றம் அல்லது ஒவ்வொரு சட்ட மன்றமும் குறைந்தது ஒவ்வொரு பன்னிரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது அமர்வினை மேற்கொள்ள வேண்டும்.

## இடம் பெயர் உரிமைகள்

6. (1) ஒவ்வொரு கனடிய பிரஜைக்கும் கனடாவிற்குள் வர, தங்கியிருக்க, வெளியே செல்ல உரிமையுண்டு. (2) ஒவ்வொரு கனடிய பிரஜைக்கும் கனடிய நிரந்தர வதிவிட தகுதிநிலை பெற்ற ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமையாவது: (அ) எந்தவொரு மாகாணத்திற்கு இடம் பெயரவும் அங்கு வசிக்கவும், மேலும் (ஆ) எந்தவொரு மாகாணத்திலும் தனது ஜீவனோபாயத்தைத் தேடவும் (3) உபவிதி (2) ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் கீழே விபரிக்கப்படுவனவற்றுக்குக் கட்டுப்பட்டன: (அ) பிரதானமாக தற்போதைய அல்லது முன்னைய மாகாண வதிவிட அடிப்படையில் நபர்களிடையே பாகுபாடுகாட்டாத ஒரு மாகாணத்தில் பொதுவான நடைமுறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நடைமுறைகள் மற்றும் (ஆ) பொதுவாக வழங்கப்படும் சமூக சேவைகளைப் பெறுவதற்கு நியாயமான குடியிருப்பு அவசியம் என ஏற்படுத்தும் ஏதாவது சட்டங்கள். (4) உபவிதிகள் (2) ம் (3) ம் ஒரு மாகாணத்தின் வேலையற்றோர் தொகை கனடாவின் வேலையற்றோர் தொகையிலும் பார்க்கக் குறைவாக இருந்து அந்த மாகாணத்தில் சமூகரீதியாக அல்லது பொருளாதார ரீதியாக பின்னடைவு உற்றவர்களது வாழ்க்கைச் சூழல் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட ஏதாவது சட்டம், திட்டம் அல்லது செயல் என்பவற்றை புறநீங்கல் செய்யா.

## சட்டஞ்சார்ந்த உரிமைகள்

7. ஒவ்வொருவருக்கும் உயிர் வாழும், தன்விருப்பாற்றல், இடர்காப்புறுதி உரிமையுண்டு இந்த உரிமை அடிப்படை நீதிக் கோட்பாடுகளுக்கு ஏற்புடைத்தான வழியில் அல்லாது பறிக்கப்படமாட்டாது. 8. ஒவ்வொருவருக்கும் நியாயத்திற்கு ஒவ்வாத சோதனையிடல் அல்லது கைப்பற்றுகைக்கு எதிரான பாதுகாப்பு உரிமை உண்டு. 9. ஒவ்வொருவருக்கும் விதிக்கட்டின்றி தடுத்துவைக்கப்படுவதற்கோ அல்லது சிறைவைக்கப்படுவதற்கோ முடியாத உரிமை உண்டு. 10. ஒவ்வொருவருக்கும் கைது செய்யப்படுமிடத்து அல்லது தடுத்து வைக்கப்படுமிடத்து (அ) அதற்கான காரணங்களை உடனடியாக அறிவிக்கப்படுவதற்கும், (ஆ) தாமதமின்றி ஒரு சட்ட ஆலோசகரை அமர்த்தவும் அறிவுறுத்தவும் அந்த உரிமை பற்றி அறிவிக்கப்படுவதற்கும் மேலும் (இ) தடுத்து வைக்கப்பட்டுள்ளதானது செல்லுபடியானதா என்பதனை ஆட்கொணர்வு மனு மூலம் தீர்மானித்து தெரிந்து கொள்ளவும் அவ்விதம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதானது சட்டத்திற்கு மாறானதாக இருப்பின் விடுவிக்கப்படவும் உரிமை உண்டு. 11. குற்றம் சுமத்தப்பட்ட ஒருவருக்கு (அ) நியாயத்திற்கு ஒவ்வாத முறையில் காலம் தாழ்த்தப்படாது அந்த குற்றம் பற்றி தெரிந்து கொள்வதற்கு, (ஆ) நியாயமான காலத்திற்குள் விசாரிக்கப்படவும், (இ) அக்குற்றச்சாட்டுத் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர் சாட்சியாக்கப்பட நிர்ப்பந்திக்கப்பட முடியாத, (ஈ) சுயேச்சையான பக்கசார்பற்ற தீர்ப்பு மன்றம் ஒன்றினால் நேர்மையாக, பகிரங்கமாக நடத்தப்பட்ட வழக்கில் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் குற்றவாளியாகக் காணப்படும் வரை குற்றமற்றவர் என்று கருதப்பட, (உ) நியாயமான காரணம் இல்லாது நேரிய பிணை மறுக்கப்படாத, இராணுவ நீதிமன்றத்தின் முன் இராணுவச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றம் தவிர்ந்த ஏனைய குற்றம் ஒன்றிற்கு ஐந்து வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அதற்கும் அதிகமான கடுமையான தண்டனை எனின் அதற்கான விசாரணையை ஜுரிகள் முன் நடத்தப்படுவதற்கான அனுகூலத்தைப் பெறும், (ஊ) ஏதாவது செயல் அல்லது செய்தக்க செய்யாமை காரணமாக, அந்தச் செயல் அல்லது செய்தக்க செய்யாமை புரியப்பட்ட போது அது கனடிய அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் அல்லது தேசங்களின் சமூகத்தினால் ஏற்பிசைவு அளிக்கப்படும் பொதுவான சட்ட கோட்பாடுகளின் கீழ் குற்றமாகக் கருதப்படாவிடத்து குற்றவாளியாகக் காணப்படாத, (எ) குற்றச்சாட்டில் இருந்து இறுதியாக விடுவிக்கப்பட்டவிடத்து மீண்டும் அதே குற்றச்சாட்டுக்கு விசாரிக்கப்படாத, இறுதியாக குற்றவாளியாகக் காணப்பட்டு அதற்கான தண்டனையை அனுபவித்த பின்னரும் அதே குற்றத்திற்காக மீண்டும் விசாரிக்கப்படாத அல்லது தண்டிக்கப்படாத, மேலும் (ஏ) குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டு குற்றம் புரிந்த காலத்திற்கும் தண்டனை வழங்கும் காலத்திற்கும் இடையில் தண்டனையில் மாற்றம் ஏற்பட்டிருந்தால் எந்தத் தண்டனை குறைவானதோ அதனையே பெறும் அனுகூல, உரிமையும் உண்டு. 12. ஒவ்வொருவருக்கும் ஏதாவது கொடூரமான அல்லது வழக்கத்துக்குமாறான முறையில் நடத்தப்படாமல் அல்லது தண்டிக்கப்படாமல் இருப்பதற்கு உரிமை உண்டு. 13. ஒரு விசாரணையில் சாட்சியமளிக்கும் ஒரு சாட்சி தாமே குற்றச்சாட்டுக்கு உள்ளாகக்கூடிய சாட்சியத்தை அளித்தால், அவர் பொய்ச்சாட்சியம் அல்லது முரண்பாடான சாட்சியம் அளித்தார் என்று வழக்குத் தொடரலாமேயன்றி, அவர் மீது வேறு விசாரணை எதனையும் மேற்கொள்வதற்கு அவரது சாட்சியத்தைப் பயன்படுத்த முடியாது. 14. ஏதாவது ஒரு விசாரணையின் போது அதன் வாதி அல்லது பிரதிவாதி அல்லது சாட்சி ஒருவர் விசாரணை நடைபெறும் மொழியைப் பேசாதவராக அல்லது விளங்கிக் கொள்ளாதவராக அல்லது காதுகேளாதவராக இருப்பின் மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியைப் பெறுவதற்கு அவருக்கு உரிமை உண்டு.

## சமத்துவ உரிமைகள்

15. (1) ஒவ்வொரு தனிநபரும் சட்டத்தின் முன்னும் அதன் கீழும் சமமானவர்கள் அத்துடன் எந்தபாகுபாடும் இல்லாது, குறிப்பாக, இனம், தேசியம் அல்லது இனமூலம், நிறம், மதம், பால், வயது அல்லது உள அல்லது உடல்ரீதியிலான இயலாமை அடிப்படையான பாகுபாடு இல்லாது சட்டத்தின் சமமான பாதுகாப்பும் சமமான அனுகூலமும் பெறுவதற்கான உரிமையும் உடையவர்கள். (2) உபவிதி (1) இனம், தேசியம் அல்லது இனமூலம், நிறம், மதம், பால், வயது அல்லது உள அல்லது உடல்ரீதியிலான இயலாமை காரணமாகப் பின்தங்கியவர்களையும் உள்ளடக்கிய வசதிகுறைந்த சூழலைச் சார்ந்த தனிமனிதர்கள் அல்லது குழுக்கள் ஆகியவற்றின் வாழ்க்கைச் சூழல் பண்புகளை மேம்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட ஏதாவது சட்டம், திட்டம் அல்லது செயல் என்பவற்றைப் புறநீங்கல் செய்யாது.

## கனடாவின் அரசகரும மொழிகள்

16. (1) ஆங்கிலமும் பிரெஞ்சும் கனடாவின் அரசகரும மொழிகளாகும். நாடாளுமன்றம் மற்றும் கனடா அரசின் சகல நிறுவனங்களிலும் இந்த அரசகரும மொழிகளுக்கு சம அந்தஸ்தும் சம உரிமைகளும், சிறப்புரிமைகளும் அவற்றின் பயன்பாடுகளில் உண்டு (2) ஆங்கிலமும் பிரெஞ்சும் நியூ பிரன்ஸ்விக்கின் அரசகரும மொழிகளாகும். சட்டநிருபண சபை மற்றும் நியூ பிரன்ஸ்விக் அரசின் சகல நிறுவனங்களிலும் இந்த அரசகரும மொழிகளுக்கு சம அந்தஸ்தும் சம உரிமைகளும், சிறப்புரிமைகளும் அவற்றின் பயன்பாடுகளில் உண்டு. (3) இச்சாசனம் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிகளின் சம அந்தஸ்த்தை அல்லது பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு நாடாளுமன்றத்திற்கு அல்லது சட்டநிருபண சபைக்கு உள்ள அதிகாரத்தை மட்டுப்படுத்தாது. 16.1 (1) நியூ பிரன்ஸ்விக்கில் உள்ள ஆங்கில மொழி சமூகத்துக்கும் பிரெஞ்சு மொழி சமூகத்துக்கும் வெவ்வேறு கல்வி நிறுவனங்கள், மற்றும் அச்சமூகங்களைப் பேணி, மேம்படுத்துவற்கு வேண்டிய வெவ்வேறு பண்பாட்டு நிறுவனங்கள் உட்பட சம அந்தஸ்தும் சம உரிமைகளும் சலுகைகளும் உண்டு. (2) நியூ பிரன்ஸ்விக் சட்டநிருபண சபையும் அரசாங்கமும் (1) ம் உபபிரிவில் குறிப்பிட்ட அந்தஸ்தையும் உரிமைகளையும் சலுகைகளையும் பேணி, மேம்படுத்தும் பணி இத்தால் வலியுறுத்தப்படுகிறது. 17. (1) ஒவ்வொருவருக்கும் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் எந்தவொரு விவாதத்திலும் நடவடிக்கைகளிலும் ஆங்கிலத்தை அல்லது பிரெஞ்சைப் பாவிப்பதற்கு உரிமை உண்டு. (2) ஒவ்வொருவருக்கும் நியூ பிரன்ஸ்விக்கின் சட்டநிருபண சபையில் இடம்பெறும் எந்தவொரு விவாதத்திலும் நடவடிக்கைகளிலும் ஆங்கிலத்தை அல்லது பிரெஞ்சைப் பாவிப்பதற்கு உரிமை உண்டு. 18. (1) நாடாளுமன்றத்தின் சட்டங்கள், பதிவேடுகள் மற்றும் அன்றாட நடவடிக்கைக் குறிப்புகள் யாவும் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும அச்சிடப்பட்டு வெளியிடப்படவேண்டும். இந்த இருமொழி வெளியீடுகளும் சம அதிகாரபூர்வம் பெற்றவை. (2) நியூ பிரன்ஸ்விக் சட்டநிருபண சபையின் சட்டங்கள், பதிவேடுகள் மற்றும் அன்றாட நடவடிக்கைக் குறிப்புகள் யாவும் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் அச்சிடப்பட்டு வெளியிடப்படவேண்டும். இந்த இருமொழி வெளியீடுகளும் சம அதிகாரபூர்வம் பெற்றவை. 19. (1) நாடாளுமன்றத்தினால் நிறுவப்பட்ட எந்தவொரு நீதிமன்றத்திலும் எந்த ஒரு நபரும் அல்லது எந்தவொரு வழக்குரைகளிலும் அல்லது நீதிமன்றம் பிறப்பிக்கும் கட்டளைகளிலும் ஆங்கிலத்தை அல்லது பிரெஞ்சை பயன்படுத்த முடியும். (2) நியூ பிரன்ஸ்விக்கில் உள்ள எந்தவொரு நீதிமன்றத்திலும் எந்த ஒரு நபரும் அல்லது எந்தவொரு வழக்குரைகளிலும் அல்லது நீதிமன்றம் பிறப்பிக்கும் கட்டளைகளிலும் ஆங்கிலத்தை அல்லது பிரெஞ்சை பயன்படுத்த முடியும். 20. கனடாவின் எந்தவொரு பொதுமகனுக்கும் கனடா நாடாளுமன்றத்தின் அல்லது அரசாங்கத்தின் எந்தவொரு தலைமை அல்லது மத்திய நிறுவனத்துடன் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் தொடர்பு கொள்ளவும் கிடைக்கக் கூடிய சேவைகளைப் பெறவும் உரிமையுண்டு. அத்துடன் (அ) குறிப்பிடத்தக்க அளவில் தொடர்புகளையும் சேவைகளையும் அத்தகைய மொழியில் வழங்கக் கூடிய வேறு எந்த நிறுவனத்திடமும் இருந்து பெறவும் அல்லது (ஆ) அலுவலகத்தின் தன்மை காரணமாக அதனுடன் ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய இருமொழிகளில் தொடர்பு கொள்வதும் சேவைகளைப் பெறுவதும் சாத்தியமானது எனப்படுமிடத்து அவற்றைப் பெறும் உரிமையும் ஒருவருக்கு உண்டு. (2) நியூ பிரன்ஸ்விக்கின் எந்தவொரு பொதுமகனுக்கும் நியூ பிரன்ஸ்விக் சட்ட நிருபண சபை அல்லது அரசாங்கத்தின் எந்தவொரு நிறுவனத்துடனும் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் தொடர்பு கொள்ளவும் கிடைக்கக் கூடிய சேவைகளைப் பெறவும் உரிமையுண்டு. 21. 16 முதல் 20 வரையிலான பிரிவுகள் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழி சம்பந்தமான எந்தவொரு உரிமை, சிறப்புரிமை, அல்லது சட்டப்படியான கடமைகள் ஆகியவற்றை அல்லது அவற்றில் எந்த ஒரு மொழியும் கனடிய அரசியல் யாப்பின் ஏற்பாட்டின்படி இருந்து வருவதை அல்லது தொடர்வதை ரத்துச் செய்யவோ மதிப்புக் குறைத்திடவோ முடியாது. 22. இச் சாசனம் அமுலுக்கு வருவதற்கு முன் அல்லது பின் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு அல்லாத எந்தவொரு மொழியும் அவ்விதம் பெற்றிருந்த அல்லது அனுபவித்த ஏதாவது சட்டரீதியான அல்லது பாரம்பரிய உரிமை அல்லது சிறப்புரிமையை 16 முதல் 20 வரையிலான பிரிவுகள் ரத்துச் செய்யவோ அல்லது மதிப்புக் குறைத்திடவோ முடியாது.



## சிறுபான்மையினர் மொழி கல்வி உரிமைகள

23. (1) கனடியப் பிரஜைகள் (அ) முதற் கற்றதும் இன்னும் புரிந்து கொள்வதுமான ஆங்கிலம் அல்லது பிரென்சு மொழிசார்ந்த அம்மாகாணத்தில் சிறுபான்மையினராக இருக்கும் பட்சத்தில் அல்லது (ஆ) கனடாவில் தமது ஆரம்ப பாடசாலைக் கல்வியை ஆங்கிலத்தில் அல்லது பிரென்சில் பெற்று அவர்கள் வசிக்கும் மாகாணத்தில் ஆங்கிலம் அல்லது பிரென்சு மொழிசார்ந்தவர்கள் சிறுபான்மையினராக இருக்கும் பட்சத்தில், அந்த மாகாணத்திலேயே தமது பிள்ளைகளும் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளி போதனைகளை அதே மொழியில் பெற உரித்துடையவராவர். (2) கனடிய பிரஜை ஒருவரின் ஏதாவது ஒரு பிள்ளை தனது ஆரம்ப அல்லது இடைநிலை பாடசாலைப் போதனையை ஆங்கிலம் அல்லது பிரென்சில் பெற்றிருந்தால் அல்லது பெற்றுக் கொண்டிருந்தால் தனது எல்லாப் பிள்ளைகளும் அதே மொழியில் ஆரம்ப அல்லது இடைநிலைப் பள்ளி போதனைகளைப் பெறுவதற்கு அவர் உரித்து உடையவராவார். (3) உபவிதிகள் (1) ம் (2) ன் கீழ் கனடிய பிரஜைகளுக்கு உள்ள உரிமையானது அவர்களது பிள்ளைகள் ஆரம்ப மற்றும் இடைநிலை பாடசாலை போதனைகளை ஒரு மாகாணத்தின் ஆங்கிலம் அல்லது பிரென்சுமொழிசார்ந்த சிறுபான்மையினரின் மொழியிலேயே பெறுவதற்கு (அ) அந்த மாகாணத்தில் இந்த உரிமையுள்ள பிரஜைகளின் பிள்ளைகளின் எண்ணிக்கை பொது நிதியத்தில் இருந்து சிறுபான்மை மொழியில் போதனைகளைப் பெறுமளவிற்குப் போதுமானதாக இருத்தல் வேண்டும் அத்துடன் (ஆ) போதுமான பிள்ளைகள் இருக்கும் பட்சத்தில் சிறுபான்மை மொழிசார்ந்த கல்வி வசதிகளை பொதுப் பணத்தில் இருந்து பெறும் உரிமையும் அடங்குகின்றது.

## அமுலாக்கம்

24. (1) எவராயினும் ஒருவரினது, இந்த சாசனத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள, உரிமைகள் அல்லது சுதந்திரங்கள் மீறப்பட்டு அல்லது மறுக்கப்பட்டிருந்தால் சட்டப்படி உரிமையும் அதிகாரமும் கொண்ட நீதிமன்று ஒன்றுக்கு நிலைமைகளுக்கு இணங்க பொருத்தமானதும் நியாயமானதுமான பரிகாரத்தைப் பெற அவர் விண்ணப்பிக்கலாம். (2) பெறப்பட்ட சாட்சியம் இந்த சாசனத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள ஏதாவது உரிமைகள் அல்லது சுதந்திரங்களை மீறி அல்லது மறுக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது என்பதை உப பிரிவு (1) ன் கீழ் இடம் பெறும் விசாரணையின் போது நீதிமன்றம் காணுமிடத்தும், கால இட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது குறித்த சாட்சியத்தை விசாரணையின் போது ஏற்றுக் கொள்வது நீதிபரிபாலனத்திற்கு அபகீர்த்தியைக் கொண்டு வரும் என்று நிரூபிக்கப்படுமிடத்தும் குறித்த சாட்சியம் விலக்கிக் கொள்ளப்படவேண்டும்.

## பொது

25. குறிப்பிட்ட சில உரிமைகளும் சுதந்திரங்களும் இந்த சாசனத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதானது கனடிய முதற்குடிகளுக்கு உரித்தானவையான, ஒப்பந்தம் மூலம் பெறப்பட்டவையான அல்லது வேறு வகையில் வந்த உரிமைகள் அல்லது சுதந்திரங்களை ரத்து செய்வதாக அல்லது மீறுவதாக பொருள் கொள்ளக் கூடாது. இவற்றுள் (அ) 1763ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ம் திகதி இராஜரீக பிரகடனத்தினால் இனங்காணப்பட்டுள்ள ஏதாவது உரிமைகள் அல்லது சுதந்திரங்கள் மற்றும் (ஆ) நில ஒதுக்கீடு ஒப்பந்தங்கள் மூலம் முதற்குடிகளினால் பெறப்படும் ஏதாவது உரிமைகள் அல்லது சுதந்திரங்களும், அடங்கும். 26. குறிப்பிட்ட சில உரிமைகளும் சுதந்திரங்களும் இந்த சாசனத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதானது கனடாவில் தற்போது காணப்படும் வேறு எந்த உரிமைகளை அல்லது சுதந்திரங்களை மறுதலிப்பதாக பொருள் கொள்ளக் கூடாது. 27. கனடியர்களது பல்கலாசார பாரம்பரியத்தை பேணுமுகமாகவும் மேம்படுத்தும் விதமாகவும் அமையுமாறு இந்த சாசனம் பொருள் கொள்ளப்படவேண்டும். 28. இச் சாசனத்தில் எது எப்படியிருப்பினும் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமானவையென உத்தரவாதமளிக்கப்படுகிறது. 29. கனடிய அரசியல் யாப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அல்லது அதன் கீழ் அளிக்கப்பட்டுள்ள சமயக் கிளையைச் சார்ந்த, பிரிக்கப்பட்ட அல்லது மாறுபட்ட கருத்துக்களையுடைய பாடசாலைகளின் ஏதாவது உரிமைகளை அல்லது சிறப்புரிமைகளை இச் சானத்தில் உள்ள எதுவும் ரத்துச் செய்ய அல்லது குறைத்திட முடியாது. 30. இந்த சாசனத்தில் ஒரு மாகாணம் அல்லது சட்ட நிருபண சபை அல்லது ஒரு மாகாணத்தின் சட்டமன்றம் என்று குறிப்பிடும் போது அது யூக்கோன் டெரிட்டரியையும் நோர்த்வெஸ்ட் டெரிட்டரீஸையும் அல்லது பொருத்தமான சட்ட மன்ற அதிகாரசபையையும் உள்ளடக்கியதாகக் கொள்ளவேண்டும். 31. இந்த சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதுவும் எந்தவொரு மக்கள் குழு அல்லது அதிகார சபையின் சட்டமியற்றும் அதிகாரத்தை விரிவுபடுத்துவதாகாது.

## சாசனத்தின் பிரயோகம

32. (1) இச் சாசனத்தின் பிரயோகமானது, (அ) யூகோன் டெரிட்டரி மற்றும் நோர்த்வெஸ்ட் டெரிட்டரீஸ் தொடர்பான சகல விடயங்களும் உட்பட்ட நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குள் வரும் சகல விடயங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்திற்கும் கனடா அரசாங்கத்திற்கும் அத்துடன் (ஆ) ஒவ்வொரு மாகாண சட்டமன்றத்தினதும் அரசாங்கத்தினதும் ஒவ்வாரு மாகாணத்தினதும் அதிகாரத்திற்கு உட்பட்ட சகல விடயங்களுக்கும், செல்லுபடியாகும். (2) உபபிரிவு (1) எப்படியிருப்பினும் இந்த பிரிவு அமுலுக்கு வந்த மூன்று வருடங்கள் வரை பிரிவு 15 செயலுறத் தொடங்காது. 33. (1) இந்த சாசனத்தின் பிரிவு 2 அல்லது 7 முதல் 15 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் நாடாளுமன்றம் அல்லது மாகாணம் ஒன்றின் சட்டமன்றம் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்த போதிலும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பொருத்தமான மன்றம் ஓர் சட்டம் ஒன்றை பிரகடனப்படுத்தும் பட்சத்தில் அச் சட்டம் அல்லது அதன் ஏற்பாடுகள் செயற்படும். (2) இந்தப் பிரிவிற்கமைய எந்தச் சட்டத்தை அல்லது சட்ட ஏற்பாட்டைக் குறித்து ஒரு பிரகடனம் விடுக்கப்படுகிறதோ அந்தச் சட்டம் அல்லது சட்ட ஏற்பாடு செயலளவில் அந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட இச்சாசனத்து ஏற்பாட்டுக்கு அமைவாகவே செல்லுபடியாகும். ஒரு சட்டம் அல்லது ஒரு சட்டத்தின் நிபந்தனை வாசகம் தொடர்பாக இந்த பிரிவின் கீழ் பிரகடனம் செய்யப்படுமிடத்து அந்த பிரகடனம் இந்த சாசனத்தின் நிபந்தனை வாசகத்தின் கீழ் பிரகடனம் செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு செயலுறத் தொடங்கும். (3) உபபிரிவு (1) ன் கீழ் செய்யப்பட்ட பிரகடனமானது அது அமுலுக்கு வந்த ஐந்து வருடத்தின் பின் அல்லது பிரகடனத்தில் அதற்கு முன்னரான திகதி குறிக்கப்படின் அப்போது செயலிழக்கும் (4) உபபிரிவு ஒன்றின் கீழ் விடுக்கப்பட்ட பிரகடனத்தை நாடாளுமன்றம் அல்லது மாகாணம் ஒன்றின் சட்டமன்றம் மீண்டும் அதனைச் சட்டமாக்கலாம். (5) உபபிரிவு (4) ன் கீழ் சட்டம் இயற்றப்படும் பட்சத்து உபபிரிவு (3) செயற்படும்.

## அழைக்கப்படும் விதம

34. உரிமைகள் சுதந்திரங்களுக்கான கனடிய சாசனம் என இது அழைக்கப்படும்

எங்களைக் கனேடியர்களாக ஒருங்கிணைக்கும் அடிப்டை நெறிகளையும் விழுமியங்களையும் நம்பிக்கைகளையும் வகுத்து, எங்கள் பிராந்தியப் பற்றுணர்வுகளைக் கடந்து, எங்களுக்கு அத்தகைய சுதந்திரத்தையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் ஈந்த இந்நாட்டினைக் குறித்து நாங்கள் பெருமைப்படவல்ல வாழ்வியற் பாங்கையும் விழுமியக் கட்டுக்கோப்பையும் காண்போம்.

P.E. Trudeau 1981

இந்த வாசகம் ஆங்கில மொழியையோ பிரெஞ்சு மொழியையோ தாய்மொழியாகக் கொள்ளாத கனேடியர்களின் நலனைக் கருதியே வெளியிடப்படுகிறது. எனினும் இது கனேடிய உரிமைகள்-சுதந்திரங்கள் சாசனத்தின் அதிகாரபூர்வமான மொழிபெயர்ப்பாகாது. பொருள்கோடலுக்கும் செப்பநுட்பத்துக்கும் மூல வாசகத்தைப் பார்க்கவும்.

TAMIL